Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. STC 4182/2017 |
| Sessions | : | |
| | | Prosecution புகார்தாரர் |
| Deposition of witness for | : | RW1 |
| Name | .. | திரு. பிரதீப், வங்கி மேலாளர், ஆக்ஸிஸ் வங்கி, திருவொற்றியூர் |
| Father's Name | .. | திரு. சத்தியநாராயணன் |
| *Village* | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 37 Date : 21.02.2023 |

(Solemnly affirmed before this court under act X of 1969)

முதல் விசாரணை

1. நான் தற்போது திருவொற்றியூர் ஆக்ஸிஸ் வங்கியில் கிளை மேலாளராக கடந்த 1 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். நீதிமன்றத்தின் அழைப்பாணை பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் கூற வந்துள்ளேன். புகார்தாரர் எனது வங்கியில் கணக்கு வைத்துள்ளார். அரசர் ஏஜென்ஸிஸ் என்ற பெயரில் நடப்பு கணக்கு வைத்துள்ளார். அதன் எண். 913020013222771. அந்த கணக்கிற்கு Granite Imports என்ற நியூயார்க்கில் இயங்கி வரும் நிறுவனம் அமெரிக்க டாலர் மதிப்பில் புகார்தாரரின் மேல் கூறிய வங்கி எண்ணுக்கு தொகையை கீழ்க்காணும் தேதிகளில் டொபாசிட் செய்யப்பட்டது. அமெரிக்காவில் இருந்து பணம் டெபாசிட் செய்தால் அது புகார்தாரரின் வங்கிக்கணக்கில் மறுதினம் தான் பிரதிபலிக்கும்.

| S.No. | Date of transaction | Date of Deposit | Amount in US dollars ($) | Amount in Indian Rupee after deducting the processing fee (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | 02.04.2014 | 03.04.2014 | 13,046.7 | 770890 |
| 2 | 19.05.2014 | 20.05.2014 | 12,500 | 662783 |
| 3 | 22.08.2014 | 25.08.2014 | 14,990 | 894400 |
| 4 | 28.10.2014 | 29.10.2014 | 8990 | 543159 |
| 5 | 21.04.2015 | 22.04.2015 | 6990 | 431874 |
| 6 | 27.04.2015 | 28.04.2015 | 22990 | 1443850 |
| 7 | 23.11.2015 | 24.11.2015 | 4643 | 303247 |
| 8 | 07.07.2016 | 08.07.2016 | 4576 | 303884 |
| 9 | 19.09.2016 | 20.09.2016 | 4490 | 295877 |
| 10 | 10.01.2017 | 11.01.2017 | 36988 | 2501212 |

மனுதாரர்/எதிரி தனது மனுவில் குறிப்பிட்டுள்ள 30.06.2014 அன்று மேற்கண்ட நிறுவனத்திலிருந்து புகார்தாரரின் வங்கி எண்ணுக்கு எந்த தொகையும் டெபாசிட் செய்யப்படவில்லை. மேற்கண்ட பரிவர்த்தனைகளுக்கு reference (swift) ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **(மேற்கண்ட ஆவணங்கள் எ.மசா.ஆ.1 முதல் எமசா.ஆ.10 வரை ஆணவமாக குறியீடு செய்யப்படுகிறது).**

2. புகார்தாரரின் மேற்சொன்ன நடப்பு கணக்கிற்கு Krishna Exports என்ற நிறுவனத்திலிருந்து, கீழ்க்காணும் தேதிகளில், இந்திய மதிப்பிலான தொகைகள் செலுத்தப்பட்டன.

| S.No. | Date | Amount (Rs.) |
|---|---|---|
| 1 | 13.06.2014 | 2,00,000 |
| 2 | 03.07.2014 | 40000 |
| 3 | 23.08.2014 | 10000 |
| 4 | 10.09.2014 | 195000 |
| 5 | 12.09.2014 | 200000 |
| 6 | 09.10.2014 | 1000000 |
| 7 | 13.10.2015 | 300000 |
| 8 | 31.12.2015 | 250000 |

| | | |
|---|---|---|
| 9 | 29.01.2016 | 200000 |
| 10 | 20.02.2016 | 10000 |
| 11 | 01.03.2016 | 200000 |
| 12 | 19.03.2016 | 7500 |
| 13 | 13.04.2016 | 5000 |
| 14 | 02.05.2016 | 300000 |
| 15 | 24.10.2016 | 50000 |
| 16 | 28.10.2016 | 1000000 |

மேற்கண்ட பரிவர்த்தனைகளை புகார்தாரரின் நடப்பு கணக்கில் காட்டுவதற்கு புகார்தாரரின் உடைய 01.03.2014 முதல் 28.02.2017 வரையான வங்கி statement ஐ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **(01.03.2014 முதல் 28.02.2015 வரை உள்ள வங்கி statement எமசா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது ; 01.03.2015 முதல் 28.02.2016 வரையிலான வங்கி statement எமசா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது ; 01.03.2016 முதல் 28.02.2017 வரை வங்கி statement எமசா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. 30.06.2014ம் வருடம் கிரானைட் இம்போர்ட்ஸ் நிறுவனத்திலிருந்து 10,000 டாலர் மற்றும் 05.03.2014 அன்று ரூ.1,40,000/- மற்றும் 24.07.2015 அன்று ரூ.70,000/- (கிருஷ்ணா எக்ஸ்போர்ட்ஸ்) ஆகிய தொகைகள் புகார்தாரரின் கணக்கில் வைப்பீடு செய்யப்படவில்லை. எங்கள் வங்கிக்கணக்கில் உள்ள வாடிக்கையாளர்களின் வேறு கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டிருக்கலாம் என்றால் அவற்றை ஆராய்ந்து பார்த்தால் தான் தெரியும்.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.